கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம்> தாராபுரம்

எம்சிஓபிநெ. 426/2017 430/2017 432/2017

2019ம் ஆண்டு 14.11.19 ம.சா.2

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி > பி.எ.பிஎல்.> கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் தனலட்சுமி | தொழில் |
| க /பெ முருகன் | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

குறுக்கு விசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்

சத்தியமாக சொல்கிறேன்.விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியுள்ளதுபோல் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றாலும் எனது கணவரும் மற்றவர்களும் பயணம் செய்த மாருதி காரின் ஓட்டுநர்தான் கவனக்குறைவாகவும் அதிவேகமாகவும் தவறான பாதையில் மாருதி வேனை ஓட்டி வந்து பேருந்தில் மோதி இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. போலீசார் பேருந்து ஓட்டுநர் கொடுத்த புகாரின் பேரில் மாருதி வேனை ஓட்டிய ஓட்டுநர் மீதுதான் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேலும் மேற்படி மாருதி வேனின் ஓட்டுநர் விபத்தில் இறந்துவிட்ட காரணத்தால் அவர்மீதான குற்றச்சாட்டை முடித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்திற்கு முழுகாரணம் மாருதி வேன் ஓட்டுநரின் கவனக்குறைவு என்பதால் இந்த 1 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து நான் இழப்பீடு கேட்கமுடியாது என்றாலும் அவர்களைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.